அலவன்ஸ் வழங்கப்பட்டிருக்கிறது. சுகாதார துப்புர வாளர்கள் சில தெருக்களில் மட்டும் பணி புரிவதால் சைக்கிள் அலவன்ஸ் வழங்கப்படவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சைக்கிள் இருக்கிறவர்களுக்கு இந்த சைக்கிள் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறதா ? சைக்கிள் இருந் தாலும் இல்லாவிட்டாலும் எல்லோருக்கும் சைக்கிள் அலவன்ஸ் உண்டா ? சைக்கிள் வாங்க முடியாதவர்களுக்குக் கடன் கொடுத்து சைக்கிள் வாங்கித் தர ஏதாவது வசதி செய்யப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சைக்கிளில் போய் மேற்பார்வை செய்கிறவர்களுக்கு இந்த அலவன்ஸ் தரப்படுகிறது. இதற்கும் சைக்கிள் வாங்குவதற்கும் சம்பந்தம் இல்லை.

வந்தவாசி ஒன்றியத்தில் நன்கொடை வசூல்.

* 183 *வினா*—**திரு. கே. ஏ. வகாப் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1974-75-ம் ஆண்டில் வந்தவாசி (வ.ஆ.) ஊராட்சி ஒன்றியம், அதன் ஊராட்சித் தலைவர்களிடமிருந்து நன்கொடைகள் வசூலித்து உள்ளதா ?

(இ) ஆம் எனில், எதற்காக எவ்வளவு தொகை வசூலிக்கப் பட்டது ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(இ) குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திற்காக, வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்த 58 ஊராட்சித் தலைவர்களிட மிருந்து அவர்கள் அலுவல் பொறுப்பில் **(Official capacity)** ஊராட்சி ஒன்றுக்கு ரூ. 100 வீதம் மொத்தம் ரூ. 5,800 மாவட்ட ஆட்சியரால் வசூலிக்கப்பட்டது.

அரிசனநலப் பள்ளிகளில் பணியாற்றும் இளநிலை ஆசிரியர்கள்.

* 184 *வினா*—**திரு. சீ. க. வடிவேலு :** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

அரிசன நலத்துறை தொடக்கப்பள்ளிகளில் ஹையர்கிரேடு ஆசிரியர்களாகப் பணியாற்றும் செகண்டரி கிரேடு படித்த ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு பதவிகள் கொடுக்கும் திட்டம் ஏதேனும் ஆய்விலுள்ளதா ?

1975 நவம்பர் 4]

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: இத்திட்டம் குறித்து அரிசன நல இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் ஏற்கப்பெற்று ஆணை ஏற்கனவே வெளியிடப்பட்டது.

இந்த ஆணையின் மூலம் அரிசன நலப் பள்ளிகளில் 229 இளநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களாக மாற்றப்பெற்றன. அதன் மூலம் 229 முதுநிலைப் பயிற்சி தேர்வு பெற்று இளநிலைப் பணியிடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் முதுநிலைப் பணியிடத்திற்கான ஊதியம் பெறுவர்.

திரு. சீ. க. வடிவேலு: அவர்கள் சேர்ந்த தேதியிலிருந்து முதுநிலை ஆசிரியர்களுக்கான சம்பளத்தைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: 229 பேர்கள் முதுநிலை ஆசிரியர்களாக மாற்றப்பட்டிருக்கிறார்கள், அதற்குரிய சம்பளமும் பெற்று வருகிறார்கள்.

திரு. ப. முத்துசாமி: ஹரிஜன நலத் துறை மூலம் நடத்தப் படுகிற பள்ளிகளில் செகன்டரி கிரேட் ஆசிரியர்களாகப் பயிற்சி பெற்றவர்கள் இன்னும் ஹையர் கிரேட் ஆசிரியர்களாகப் பணி புரிந்து கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர்கள்? அவர்களை செகன்டரி கிரேட் ஆசிரியர்களுக்குள்ள இடத்தில் அமர்த்தி உரிய சம்பளம் கொடுக்க துறையினர் முயற்சி எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: என்னிடமுள்ள குறிப் பின்படி 229 இளநிலை ஆசிரியர்களின் பணியிடங்கள் முதுநிலை ஆசிரியர் பணியிடங்களாக மாற்றப்பெற்றன. இதற்கு மேலும் இருந்தால், இன்னும் இருக்கிறார்கள், படிப்படியாக அவர்கள் முதுநிலை ஆசிரியர்களாக மாற்றப்படுவார்கள் என்ற அறிவிப்பு இருந்திருக்கும். ஆகவே இல்லை என்று பொருள்.

திரு. முனு ஆதி: முதுநிலை ஆசிரியர்கள் நிறைந்திருப்பதால் மூன்று ஆண்டுகளுக்குப் பயிற்சிப் பள்ளிகளை நிறுத்திவிடுவது என்று கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்னது உண்மைதானா? மூன்று ஆண்டு களுக்கு அந்தப் பயிற்சிப் பள்ளிகளை நிறுத்திவைப்பது என்று சொல்லியிருக்கிறார்களே, அது உண்மைதானா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: ஹரிஜன நலத்துறைப் பள்ளிகளில் வேலை செய்கிறவர்களைப் பற்றிய கேள்வி இது. பொதுக் கேள்விக்குத் தனியாகக் கேள்வி போட்டால் கல்வித் துறையிலிருந்து விடைபெற முடியும்.

சோத்துப்பாக்கம் அரிசனக் குடியிருப்பில் நீர்த் தேக்கத் தொட்டி

* 185 வினு—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம், அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் அரிசன நல இலாகாவின் மூலம் நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் தொகுதியில் சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் ஏற்கனவே உள்ள தரைமட்ட நீர்த் தேக்கத் தொட்டி உபயோகத்திற்கு லாயக்கற்றதாய் இருப்பதால் அங்கே தானே இயங்கும் நீர் அழுத்தத் தொட்டி கட்ட மாவட்ட ஆட்சித் தலைவர் தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறர்.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, அச்சிறுபாக்கத்திலுள்ள சோத்துப்பாக்கத்தில் 5 ஆண்டுகளுக்கு முன்னுலே கட்டப்பட்ட நீர்த்தொட்டி பராமரிப்பு இல்லாத காரணத்தால் உபயோகமற்றது என்று தள்ளப்பட்டு இருக்கிறது. அதேபோல் என்னுடைய தொகுதியில் ஊனமலை, சூணம்பேடு போன்ற இடங்களிலும் இப்படிப்பட்ட நிலை இருக்கிறது. மேலும், தமிழ்நாடு பூராவிலும் இப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், அப்படிப்பட்ட நீர்த்தொட்டிகளை சரியான வகையில் பராமரிக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம்: தலைவரவர்களே, கேள்வி அச்சிறுபாக்கத்திலுள்ள சோத்துப்பாக்கம் அரிசனக் காலனியில் உள்ள நீர்த்தேக்க தொட்டியைப் பற்றியதாகும். பல காலனிகளைப் பற்றிக் கேட்டால் அதற்கான விடை இருக்காது. தனிக் கேள்வி போட்டால் விடை கொடுக்கலாம்.